[2002 ஏப்ரல் 4

மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் கேட்ட இந்தப் பள்ளியைக் குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலனை செய்து, அரசு நிதிநிலைக்கு உட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அகவிருள் அகற்றி, அறிவொளி வீச, அல்லும் பகலும் பாடுபடும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது தொகுதியிலுள்ள வீரகேரளம் புதூர் வட்டாரத் தலைநகர். அதுமட்டுமல்லாமல், இந்தப் பள்ளி, சுமார் 4 பஞ்சாயத்துகள் அடங்கிய பள்ளியாகும். இந்த உயர்நிலைப் பள்ளியில் சுமார் 1200 மாணவர்கள் பயில்கின்றனர். ஆண்டுக்காண்டு மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பை முடித்து விட்டு தொலைவில் உள்ள சுரண்டை தனியார் மேல்நிலைப் பள்ளியில்தான் வசதி உள்ளவர்கள் மட்டும் பயில முடிகிறது. மற்றவர்கள், குறிப்பாக ஆதி திராவிடர்கள், பெண்கள் படிப்பைத் தொடர முடிவதில்லை. ஆகவே, இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரும்படி பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சராக புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் 3 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தரப்பட்டன. அதுபோல, இந்த ஆண்டும் சில பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசானது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. வருகின்ற 9, 10 ஆகிய இரண்டு தேதிகளில் கல்வி மானியத்தினுடைய விவாதம் நடைபெற இருக்கிறது. அதற்குப் பிறகு, எந்த அளவிற்கு நிதியானது கல்வி மானியத்திற்கு ஒதுக்கப்படுகிறது என்பதற்கு உட்பட்டு, அதன் மூலமாக, அந்த அளவைத் தெரிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 81, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

2002 ஏப்ரல் 4]

81—

பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

***9161—திருமதி கு. கலாவதி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, பொம்மசமுத்திரம் கிராமம், இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மற்றும் நாமகிரிப்பேட்டை ஒன்றியம், கரியாம்பட்டி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரியாம்பட்டி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்தும், பிறகு இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்தும், உயர்மட்டக் குழுவால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கு. கலாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற என்னுடைய தொகுதியில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, வரும் கல்வி ஆண்டிலாவது பொம்மசமுத்திரம் கிராமம், இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்திட நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். நான் முன்பு சொன்னது போல, இந்த மானியக் கோரிக்கைகள் முடிந்தவுடனே, பணத்தை எந்த அளவுக்கு இந்த அவையானது நம்முடைய கல்வித் துறைக்கு ஒதுக்குகிறதோ, அதற்கேற்றாற்போல், இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதோடு, கரியாம்பட்டி தொடக்கப்

பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கவும் கேட்டிருக்கின்றார்கள். நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும், தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, இந்தத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குவதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. இந்த ஆண்டு அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்கி சாதனை படைத்துள்ளார்கள். அதன் அடிப்படையிலே, வருகிற நிதியாண்டில் மக்களுடைய பங்குத் தொகை முழுமையாக அளிக்கப்பட்டிருந்தும், ஒருசில பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படவில்லை. அப்படித் தமிழகத்திலே மக்கள் பங்குத் தொகை முழுமையாகக் கொடுத்திருக்கிற மேல்நிலைப் பள்ளிகள் அனைத்தும் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பங்குத் தொகை கட்டினால் மட்டும் போதாது; அதை ஒரு விதியிலேயே வைத்து இருக்கின்றோம். அதோடு மாணவர்களுடைய எண்ணிக்கையும் கருத்திற்கொள்ளப்படும். பிறகு, அதற்கு வேண்டிய நிலம் 5 ஏக்கர் இருக்க வேண்டும், ஆண்கள் பள்ளிகள் என்றால். பெண்கள் பள்ளி என்றால் 3 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். கட்டடங்களும் இருக்க வேண்டும். இவையெல்லாம் இருந்தால்தான் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். சில பள்ளிகள் இவற்றையெல்லாம் பெற்றிருக்கின்றன. அத்தகைய பள்ளிகளுடைய விவரங்களைப் பெற்று அவற்றையெல்லாம் ஆய்வில் கொண்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப அந்தப் பள்ளிகளுக்கு, இந்த ஆண்டோ, வருகின்ற கல்வி ஆண்டிலோ அனுமதி தருவதற்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.